கல்லூரிக் கல்வித் துறை

| அனுப்புநர் | பெறுநர் |
| --- | --- |
| முனைவர்.ம.ஈஸ்வரமூர்த்தி,<br>எம்.எஸ்சி., எம்.ஃபில்., பிஎச்.டி.,<br>கல்லூரிக் கல்வி இயக்குநர்(மு.கூ.பொ),<br>கல்லூரிக் கல்வி இயக்ககம்,<br>சென்னை – 600 015. | 1. மண்டலக் கல்லூரிக் கல்வி இணை இயக்குநர், அனைத்து மண்டலங்கள்.<br>2. பதிவாளர், சார்ந்த பல்கலைக்கழகங்கள். |

ந.க.எண்.23541/க்யூ2/2018 நாள். 29.10.2022

அய்யா / அம்மையீர்,

பொருள்: கல்லூரிக் கல்வித் துறை – 41 பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள் அரசு கல்லூரிகளாக மாற்றம் செய்யப்பட்டமை – அரசாணை வழங்கியமை – வழிகாட்டு நெறிமுறைகள் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண்.183 உயர்கல்வி (ஜி1) துறை, நாள்.15.09.2022
2. அரசாணை (நிலை) எண்.186 உயர்கல்வி (ஜி1) துறை, நாள்.15.09.2022
3. அரசு கடித எண். 10215/ஜி1/2022–1, நாள் 26.09.2022
4. அரசு கடித எண். 10155/ஜி1/2022–1, நாள் 22.09.2022
5. இவ்வலுவலக கடித ந.க.எண். 23541/க்யு2/2018, நாள். 03.10.2022, 06.10.2022

------

பார்வை 1 மற்றும் 2–ல் காணும் அரசாணை வாயிலாக பல்வேறு பல்கலைக்கழகங்களின் கீழ் இயங்கி வந்த 41 உறுப்பு கல்லூரிகளை அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளாக மாற்றம் செய்யப்பட்டு, ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லா பணியிடங்கள் தோற்றுவித்தும், அதற்கான நிதி மற்றும் நிர்வாக ஒப்பளிப்பு வழங்கியும் ஆணைகள் பெறப்பட்டன. இந்நிலையில் பார்வை 3 மற்றும் 4–ல் காணும் அரசு கடிதங்களில் செப்டம்பர் 2022 முதல் தொடர் சம்பள செலவினங்களை மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அலுவலகம் மூலமாக மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

பார்வை 5 ல் காணும் கடிதம் வாயிலாக 41 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு அக்டோபர் 2022 முதல் ஊதியம் வழங்குதல் தொடர்பாக நடவடிக்கைகளை

மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. இப்பொருள் தொடர்பாக மேற்படி நடவடிக்கைகளை மேற்கொள்ள பின்வரும் வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கப்படுகின்றன.

1. பார்வை 1 மற்றும் 2 ல் காணும் அரசாணைகளின் இணைப்புகளில் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள பணியிடங்களுக்கு மட்டுமே ஊதியங்கள் வழங்கப்பட வேண்டும்.
2. அரசாணையில் குறிப்பிட்டுள்ளவாறு ஒப்பளிப்பு செய்யபடாத ஆசிரியரல்லா பணியிடங்களை சார்ந்த பல்கலைக்கழகங்கள் திருப்பி பெற்றுக்கொள்ள வேண்டும்.
3. அரசாணையின் இணைப்பில் ஒப்பளிப்பு செய்யபடாத பாடபிரிவுகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு முறையான அரசாணை பெறும் வரை சார்ந்த பல்கலைக்கழகங்களால் ஊதியம் வழங்கப்பட வேண்டும்.
4. அரசாணையின் இணைப்பில் சார்ந்த பணியிடங்களுக்கான ஊதிய விகிதம் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வூதிய விகிதத்தின் படி ஊதியம் வழங்கப்பட வேண்டும். பார்வை 1 ல் காணும் அரசாணையில் உதவி செய் நிரலர், அலுவலக உதவியாளர் மற்றும் பதிவுரு எழுத்தர் ஆகிய பணியிடங்களுக்கு தவறாக ஊதிய விகிதம் வழங்கப்பட்டுள்ள நிலையில் சரியான ஊதிய விகிதம் நிர்ணயம் செய்யவும் அரசாணையில் திருத்தம் மேற்கொள்ளவும் கருத்துரு அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மேலும், அரசாணை (நிலை) எண்.36, உயர்கல்வித் (ஜி1) துறை, நாள். 28.02.2019 ன் படி முதல்வர் (நிலை I) க்கான ஊதிய விகிதம் ஒப்பளிப்பு செய்யப்பட்டது. அரசு கல்லூரிகளாக மாற்றப்பட்ட இக்கல்லூரிகளை நிலை II கல்லூரிகளாக கருதப்படும் நிலையில் பார்வை 2 ல் காணும் அரசாணையில் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ள ஊதிய விகிதத்தில் மட்டுமே ஊதியம் வழங்கப்பட வேண்டும். மாற்று ஊதிய விகிதம் ஏதும் இருப்பின் அக்கல்லூரிகளின் பணியாளர்களுக்கு சார்ந்த பல்கலைக்கழகங்கள் மூலம் பெற்று கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.
5. அரசாணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பதவிகளுக்கு மட்டுமே ஊதியம் வழங்க வேண்டும். பதவி பெயர்களில் மாற்றம் இருப்பின் அப்பதவிகளுக்கு ஊதியங்கள் சார்ந்த பல்கலைக்கழகங்களால் வழங்கப்பட வேண்டும். பதவி பெயர்களில் திருத்தம் தேவை இருப்பின் தனியே அரசுக்கு கருத்துரு அனுப்பி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

6. பார்வை 1 ல் காணும் அரசாணையின் இணைப்பில் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ள முறையான பணியிடத்தில் பணியாற்றும் தனியர்கள் பல்கலைக்கழகத்திலிருந்து மாற்றுப் பணியில் பணிபுரிவதாக கருதப்பட வேண்டும். இவ்வாறு பணிபுரியும் தனியர்களுக்கு சார்ந்த கல்லூரி பொறுப்பு முதல்வர் (முதல்வர் தவிர்த்து) ஊதியம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.
7. கல்லூரிகளுக்கு அக்டோபர் 2022 முதல் மார்ச் 2023 வரை தேவைப்படும் தொடரும் செலவினங்களை இணைப்பில் காணும் படிவத்தில் பூர்த்தி செய்து அனுப்பிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.
8. சார்ந்த பதிவாளர்கள் முறையான பணியாளர்களுக்கான முன் ஊதியச் சான்றினை (Last Pay Certificate) சம்பந்தப்பட்ட கல்லூரி முதல்வர்களுக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.
9. அரசுக் கல்லூரிகளாக மாற்றப்பட்ட பின்னும் பெறப்பட்ட பெற்றோர் ஆசிரியர் கழக நிதி, முன்னாள் மாணவச் சங்க நிதி உள்ளிட்ட இதர தொகைகளையும் சரிபார்த்து பெற வேண்டும்.
10. 27 கல்லூரிகளுக்கு முதல்வர் (மு.கூ.பொ.) நியமனம் செய்யப்பட்டுள்ள நிலையில் கல்லூரிகளை அரசு கல்லூரிகளாக முழுமையாக மாற்றப்பட்டதை தொடர்ந்து, சார்ந்த கல்லூரிகளில் பணிபுரிந்து வரும் பல்கலைக்கழகத்தால் நியமிக்கப்பட்ட முதல்வர்கள் பின்வருமாறு கல்லூரியின் அசையும் மற்றும் அசையா சொத்துக்களின் முழு விவரங்களை அரசால் நியமிக்கப்பட்ட பொறுப்பு முதல்வர்களிடம் முறையே ஒப்படைக்கவும், கல்லூரியின் அனைத்து ஆவணங்களையும் முழுமையாக ஒப்படைக்கவும் (Hand over Charge) கேட்டுக்கொள்ளப்படுகிறது.
    i. கல்லூரி அமைவிடத்தின் நிலம் தொடர்பான ஆவணங்கள்.
    ii. கல்லூரி அமைவிடத்தின் நிலம் தொடர்பாக வழக்குகள் ஏதேனும் நிலுவையில் இருப்பின் வழக்குகள் அனைத்தும் சார்ந்த பல்கலைக் கழகங்களே தொடர்ந்து சார்ந்த நீதிமன்றங்களில் பொறுப்பேற்று நடத்த வேண்டும்.
    iii. கல்லூரி அமைவிடத்தின் நிலம் குத்தகை நிலமாக இருப்பின், மறு உத்தரவு பிறப்பிக்கும் வரையில் இந்த குத்தகை தொகை தொடர்ந்து சார்ந்த பல்கலைக் கழகம் ஏற்பது.

iv. சார்ந்த கல்லூரிக் கட்டடங்கள் தொடர்பான அனைத்து (Plan, Estimate, Approval, Stability/Fire Safety, E.B. Connections, Etc.) விவரங்களையும் ஒப்படைத்தல்.

v. கல்லூரிகளில் தற்போதுள்ள தளவாடங்கள், ஆய்வக உபகரணங்கள், கணினி மற்றும் தொடர்புடைய சாதனங்கள், புத்தகங்கள் உள்ளிட்ட அனைத்து அசையும் சொத்துகள் முறையாக ஒப்படைத்தல் மற்றும் இந்த அசையும் சொத்துக்களுக்கான இருப்புப் பதிவேடுகளுடன் ஒப்பிட்டு, சரிபார்த்து பொறுப்பு ஏற்க நடவடிக்கை.

vi. சார்ந்த கல்லூரிகளின் வங்கி கணக்கு தொடர்பான புத்தகங்கள் மற்றும் இருப்பு தொகை விவரங்களும், கல்லூரிகளில் பயன்படுத்தப்படும் கணக்கு பேரேடுகள் (Cash Books) பொன்ற அனைத்து பதிவேடுகளையும் முறையே பொறுப்பு முதல்வர்களிடம் ஒப்படைத்தல்.

11. சார்ந்த கல்லூரிகளுக்கான பணம் பெற்று வழங்கும் அலுவலர் குறியீடு (DDO Code) பெற்று IFHRMS வழி பட்டி தயார் செய்யும் வரை அவசர அத்தியாவசியமான மின் கட்டணம், தொலைபேசிக் கட்டணம் மற்றும் பிற கட்டணங்களை தங்களது கல்லூரிகளில் உள்ள பெற்றோர் ஆசிரியர் கழகம் (PTA) மற்றும் பதவி பெயர் வைப்புத் தொகைக் கணக்குகளிலிருந்து (PD Accounts) மேற்கொள்ளுமாறும் மேற்காண் பணம் பெற்று வழங்கும் அலுவலர் குறியீடு (DDO Code) பெற்ற பின்னர் மேற்காண் செலவினம் மேற்கொண்ட தொகையினை அரசிடமிருந்து உரிய நிதி ஒப்பளிப்பு பெற்ற பின்னர் உரிய பட்டி (Bills) தயார் செய்து பெற்றோர் ஆசிரியர் கழகம் / பதவிப் பெயர் வைப்புத் தொகைக் கணக்குத் தலைப்புகளில் மீள வரவு வைத்து (Reimbursement) ஈடு செய்து அதன் அறிக்கையினையும் உடன் இவ்வலுவலகத்திற்கு அனுப்புமாறும் மேற்காண் வரவு செலவு விவரங்களை உரிய பதிவேடுகளில் சரியான முறையில் பராமரிக்குமாறும் சார்ந்த கல்லூரி முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

29/10/22

கல்லூரிக் கல்வி இயக்குநர்(மு.கூ.பொ.)

27/10/22

இணைப்பு:

படிவம்

படிவம்

| வ.எண் | பொருள் | தேவைப்படும் தொகை (ரூ.) |
| --- | --- | --- |
| 1 | மின் கட்டணம் | |
| 2 | தொலைபேசி கட்டணம் | |
| 3 | சில்லறை செலவினங்கள் | |